சார்பு நீதிமன்றம், அவிநாசி

**MCOP No. 153 /2017**

Dt: 03.01.2023

மா.சா. –1 ரேவதி

2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :

நான் யார் மீது வழக்கு போட்டுள்ளேன் என்றால் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு எதிராக வழக்கு போட்டுள்ளேன். வேறு யார் மீது வழக்கு உள்ளது என்று எனக்குத் தெரியாது. என்னுடைய கணவர் யாரிடம் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தார் என்றும், சம்பளம் யாரிடம் பெற்றார் என்றும் மனுவிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிடவில்லை என்றால் இருக்கலாம். விபத்து சம்மந்தமாக என் கணவர் மீதுதான் போலீசார் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையை என் தரப்பு ஆவணமாக நான் தாக்கல் செய்துள்ளேன். அந்த முதல் தகவல் அறிக்கையை படித்து பார்த்துள்ளேன். விபத்திற்கு காரணம் என் கணவர்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது சொந்த ஊர் தேனூர், மதுரை மாவட்டம் ஆகும். விபத்திற்கு முன்பு நாங்கள் அங்குதான் வசித்து வந்தோம். நான் இன்றும் சாட்சியமளிக்க தேனூரிலிருந்துதான் வருகிறேன். அதுதான் எங்களுடைய ஒரே முகவரி. அவிநாசியில் நான் தங்கவில்லை, குடியிருக்கவுமில்லை என்றால் சரிதான். என் கணவர் பரமசிவம் என்பவரிடம் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தார். விநாயகா டிராவல்ஸ் என்ற பெயரில் பரமசிவம் தொழில் செய்து வந்தார். என் கணவர் வேறு யாரிடமும் வேலைக்கு போகவில்லை. சம்பத்குமார் யார் என்று எனக்குத் தெரியவில்லை. அவரிடம் என் கணவர் வேலை பார்க்கவில்லை. எனக் கணவரே விபத்திற்கு காரணமாக இருப்பதால், நான் எந்த இழப்பீடும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. தரப்பினர்காள் யாரும் அவிநாசி நீதிமன்ற ஆள்வரைக்குள் இல்லாததால், மனு தாக்கல் செய்துள்ளது செல்லாது என்றால் சரியல்ல. பரமசிவத்திடம் இழப்பீடு கேட்டுள்ளேன். காப்பீட்டு நிறுவனத்தின் மீதும் வழக்கு போட்டுள்ளேன். மேற்படி பரமசிவம் எந்த காப்பீடும் 2-ம் எதிர்மனுதாரரிடம் செய்யாததால், 2-ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க சம்மந்தப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரரிடம் என் கணவர் வேலை செய்து வராத நிலையில், 2-ம் எதிர்மனுதாரரிடம் நாங்கள் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd./-K.Suresh Kumar,
Subordinate Judge,
Avinashi.